මධ්‍යම පළාත් සභාවේ කලාප අධ්‍යාපන කාර්යාලය- මාතලේ
மத்திய மாகாண சபையின் வலயக் கல்விக் காரியாலயம் - மாத்தளை
ZONAL EDUCATION OFFICE OF CENTRAL PROVINCIAL COUNCIL- MATALE

Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education Office – Matale Zonal Education

# e-Learning Programme - 2020

| Grade - 10 | Assignment - 01 | Tamil Language |
|---|---|---|

பின்வரும் செயலட்டையின் எல்லா வினாக்களுக்குமான விடைகளை ஒப்படையாக தயாரிக்குக.

1) சுருக்கமான விடை எழுதுக.

1. பின்வரும்தொடரை சந்திபிரித்து எழுதுக. “கணக்காயரில்லாத வூரும் பிணக்கறுக்கு மூத்தோரையில்லா வவைக்களனும்”
2. அ)“தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை” எனும் பாடலடியினை சந்தி பிரித்தெழுதுக.
   ஆ)இப்பாடலின் மையக்கருத்து யாது?
3. விவேக சிந்தாமணி பாடலில் மண்டுகத்திற்கும் வண்டிற்கும் ஒப்பிடப்படுபவர்கள் யாவர்?
4. “புலன்களோடு கரணமும் ஆவியும் போந்து நின்ற விருப்புடன்”
   அ) இங்கு ‘புலன்கள் என்று குறிப்பிடப்படுபவை எவை?
   ஆ) ‘கரணம்’ என்று குறிப்பிடப்படுவது யாது?
5. “திரிகடுகம் என்று அந்நூலுக்கு பெயர் வரக்காரணம் யாது?
6. வாக்குண்டாம் எனும் நூலின் ஆசிரியர் யார்?
7. அ)வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர் யார்?
   ஆ) அந்நூலை குறிக்கும் வேறு பெயர்கள் எவை?
8. “கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே”
   அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
   ஆ) அந்நூலை இயற்றியவர் யார்?
9. இனியவை நாற்பது யாரால் பாடப்பட்டது?
10. “நாவலர் எழுந்தார்” என்ற கட்டுரையில்
    அ) அன்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?
    ஆ) தலைமை தாங்க வேண்டியவர் யார்?

11.அ)பாரதியார் சுயசரிதையில் இங்கு சுயசரிதை என்பதன் பொருள் யாது?
ஆ) “சுதந்திர நற்பயிர் என்பதில் இடம்பெற்றுள்ள அணி யாது?
12. “வருகிறேன் போகிறேன் என்று சொல்லாமலே நாவலரிடமிருந்து பறந்துவிட்ட நோய் எது?
13.முதுமொழி வெண்பா பாடலினூடாக மன நிறைவை எடுத்துக்காட்டும் செயல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
14. சென்னை சர்வ கலாசாலையில் முதன்முதலில் நடத்தப்பட்ட ‘பிஏ’ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர் இருவரும் யாவர்?
15. “பொழிந்த நெய் ஆகுதி வாய் வழிப்பொங்கி எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்” இப்பாடலடி இடம் பெற்ற இலக்கியம் யாது?
16. தமிழில் ‘சுயசரிதம்’ என்ற வடிவத்தை முதன்முதலில் கையாண்டவர் யார்?
17. பாரதி “புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்” என்பதன் மூலம் காதலியிடம் எதிர்பார்ப்பது யாது?
18. தாம் விரும்பியதை அடைய முடியாது தவிப்பவரின் குணவியல்புகள் இரண்டு தருக.
19. நாலடியார் என்ற நீதி நூல் எழுந்த காலப்பகுதி எது ?
20. பாரதியார் சுயசரிதையில் இடம் பெற்றுள்ள விலங்கியற்கை எனும் தொடரின் பொருள் யாது?

(20 X 2 = 40 புள்ளிகள்)

பகுதி 2

2) பின்வரும் இலக்கியப்பகுதிகளை வாசித்து அதன் கீழே காணப்படும் வினாக்களுக்கு விடை தருக.

1. அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாங் கொக்கு

அ) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணியினைக்குறிப்பிட்டு விளக்குக.
ஆ) இப்பாடலின் மூலம் உணர்த்தப்படும் நீதிக்கருத்து யாது?

2. தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத்திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரை
கண்டே களித்தந்குறவாடி தம்மிற்
கலப்பர் கற்றோரே.

அ) இங்கு புல்லரின் இயல்பு யாதெனக் குறிப்பிடப்படுகிறது?
ஆ) இங்கு மண்டுகம் கமலம் என்பவற்றின் பொருள் யாது?

3. “பிரசண்ட மாருதத்திற்கு பிறகு” என்று சொல்லுகின்ற பிறகு அந்தச்சபையில் நிலவியது.பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிரிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழேயிறங்கி தரை மட்டத்திற்கு வந்து விட்டார்கள்.தபால் தந்தி கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. “ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றி பலர் கூட்டங்கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்” என்றார் நாவலர் அவர்கள்.

அ) பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்பதன் பொருள் யாது?
ஆ) இப்பகுதி இடம் பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக. (3 X 4 = 12 புள்ளிகள்)

3) பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதுக.

1. பெரியோர் பற்றியும் சிறியோர் பற்றியும் வெற்றிவேற்கை பாடலில் எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்கக.

2.நல்ல நட்பு பற்றியும் கூடா நட்பு பற்றியும் நாலடியார் பாடல் எவ்வாறு எடுத்துக்காட்டுகிறது?

3.திரிகடுகம் என்னும் நீதிநூலில் உடலுக்கு நன்மை தரும் மூன்று மருந்துகளும் வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்களும் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன?

4.நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில் ,
அ) நாவலரின் திறமை
ஆ) அவர் கிளர்ந்தெழுந்த வேகம் என்பன எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன?

5. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில் ,
அ) நாவலருக்கும் விசுவநாதபிள்ளைக்குமான தொடர்பு
ஆ) பிரிற்றோவின் செயல் குறித்து நாவலரின் உணர்வு வெளிப்பாடு என்பன எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன?

6. பாரதியார் சுயசரிதையில் ,
அ) பிள்ளைக்காதல்
ஆ) அன்பு கொண்டவள் மீதான எதிர்பார்க்கை என்பன எவ்வாறு எடுத்துக்காட்டப்படட்டுள்ளது?

( 6 X 8 = 48 புள்ளிகள்)